# பேரவையில் இருந்து கழக உறுப்பினர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றம்!

## கழகக் கொறடா எ.வ.வேலு பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

பணியாற்றி இருக்கிறார்கள். நாங்கள் காவல் துறை மானியத்திலே நாங்கள் நிறைய பேசியிருக்கிறோம். நீங்களே அவைக் குறிப்பிலே எடுத்துப் பார்த்தால் அவையெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

**நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும்போது**
**பேரவையில் பேச இடமில்லை!**

ஆனால், கண்ணியமிக்க பதிலைத்தான் அவர்கள் வழங்குவார்கள். நாங்களும் எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் சில குறைகளைச் சுட்டிக்காட்டித்தான் நாங்கள் பேசுவோம். அதற்குத்தான் அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது ஏறத்தாழ நாங்கள் 26 நிமிடம் அமைதி காத்தோம். அதில் ஒன்றும் மாற்றமில்லை, நீங்கள் எடுத்துப் பாருங்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு நீங்கள் தந்திருக்கிற இந்த விதிப் புத்தகத்திலே 92இல், நீதிமன்ற விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு பேரவையில் குறித்துப் பேசுவதற்கு இடமில்லை என்று நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்தில்தான் எங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள்.

**கண்ணியத்திற்குரிய**
**செயல் இல்லை!**

நேற்றைய நம்முடைய முதலமைச்சர் பேசிய அந்த முழுப் பேச்சை எடுத்து நீங்கள் பார்த்தால், ஈ.டி (ED) வழக்கு தொடுத்திருக்கிறது, நீதிமன்றத்திலே அந்த வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு இருக்கிறபொழுது அவரே சொல்கிறார், ஈ.டி. அனுப்பிய ஆவணத்திலிருந்து சில தகவல்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அல்லவா என்று வழக்கை முழுவதும் இந்த அவையிலே அவர் படிக்கிறார். அது அவையினுடைய மரபிற்கு மீறிய செயல்தான், அது கண்ணியத்திற்குரிய செயல் இல்லை. எனவே, அது விதிக்கு உட்பட்டதாக இல்லை என்பது எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து.

**ஓராண்டு காலம் மிசாவில் இருந்தவர்**
**எங்கள் தலைவர்!**

அதோடு மட்டுமல்ல, மிசா என்பது அனைவருக்கும் தெரிகிறது தமிழ்நாட்டில். அந்த மிசா என்கிற கொடுமை ஜனநாயகத்திற்கு எதிராக வந்தடைந்ததுதான் அந்த மிசா என்பது. அதிலே கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 450க்கும் மேற்பட்டோர் சிறைக்குப் போனார்கள், கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை ஏராளம். அந்த வகையில்தான் அன்றைக்கு இந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக அன்றைக்கு எங்களுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள், 60 ஆண்டு காலத்திற்கு பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், அவர் அந்த மிசாக் கொடுமையிலே ஆளாக்கப்பட்டு ஓராண்டு காலம் சிறையிலே இருந்தார்கள். அப்படிப்பட்ட அந்த ஜனநாயகப் போராட்டத்திலே ஜனநாயகத்தை தமிழ்நாட்டில் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக... அதோடு மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொள்கைத் தலைவர் என்று பெரியாருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற, அதற்குப் பின்னால் திராவிட இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய ஆசிரியர் வீரமணி அவர்கள் கூட இந்த மிசாக் கொடுமையிலே அவரோடு இருந்தார்கள்.

அடுத்து, அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களும் எங்களோடு மிசாவில் இருந்தார்கள்.

நேற்று சர்க்காரியா கமிஷனைப் பற்றி இங்கே பேசப்பட்டது. இந்த அவையிலேயே எத்தனை வருடமாக அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்?

**இந்தியாவிற்கு புகழ்**
**சேர்த்தவர் மாறன்!**

பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் வந்து இந்த சட்டமன்றத்திலே பலமுறை பேசப்பட்டு, அண்ணன் கலைஞர் முதலமைச்சராக அவரே பதில் சொல்லியிருக்கிறார். அதிலிருந்தும் மறுக்க முடியாது. ஆனால், அந்த சர்க்காரியா கமிஷனைப் பற்றிப் பேசுகிறபொழுது, இந்தியாவிற்கு, உலகத்திற்கே இந்தியாவிற்குப் புகழ் சேர்த்த அண்ணன் மாறனுடைய பெயர் நேற்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, வெளியில் இருக்கிற யாருடைய பெயரும் சட்டமன்றத்திலே பேசக்கூடாது, பதில் சொல்வதற்கு வாய்ப்பில்லை என்பதால் பேசக்கூடாது என்று ஒரு விதியே இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அவர் இறந்தவர், புகழ் சேர்த்தவர்.

**'இதைப்பற்றி ஒன்றும் தெரியாது'**
**என்று சொன்னவர் எம்.ஜி.ஆர்.!**

அந்த சர்க்காரியா கமிஷன்ல என்ன நடந்தது என்று சொன்னால், அந்த கமிஷன் எல்லாம் முடிகிறபொழுது நிறைவாக சர்க்காரியா கமிஷனுடைய நீதிபதியாக இருந்த சர்க்காரியா என்ன சொன்னாரென்றால், 28 குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டது. அந்த 28 குற்றச் சாட்டுகளில் விசாரணைக்குக் கூப்பிடுகிற பொழுது எம்.ஜி.ஆர் அவர்களும் விசாரணைக்குப் போகிறார். போகிறபொழுது சொன்னார், 'எனக்கு இதைப் பற்றி எதுவுமே தெரியாது, சேலத்தில் வழக்கறிஞர் கண்ணன் என்பவர் இயக்கத்தைச் சார்ந்தவர் கொடுத்தார், அதை வைத்து நான் சொல்லிவிட்டேன், இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது' என்றுதான் சொல்லிவிட்டு வந்தார். நிறைவாக சர்க்காரியா அந்த கமிஷனை முடிக்கிற பொழுது என்ன சொன்னாரென்றால், '28 குற்றச்சாட்டுகள் எந்தவிதத்திலும் நிரூபிக்கப்படவில்லை, அதனால் வழக்கு தொடர முடியாது' என்றுதான் அவர் முடித்தார். ஒரு கமிஷன் எதற்குப் போடுகிறார்கள் என்றால், வழக்கு தொடர்வதற்கு முன்னால் ஆதாரங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக.

அந்த கமிஷனில் ஏதாவது ஆதாரம் இருக்கும் என்று சொன்னால்தான் அதற்குப் பின்னால் எஃப்.ஐ.ஆர் போட்டு, சார்ஜ்ஷீட் போட்டு வழக்கு போக முடியும். ஆனால், சர்க்காரியா கமிஷனில் எந்தவித ஆதாரமும் முகாந்திரமும் இல்லை, இது வழக்கு தொடர முடியாது என்று சொல்லி அவரே முடித்துவிட்டதை, இங்கே ஏதோ தவறு நடந்ததைப் போலவும், அதிலே ஏதோ நம்முடைய அண்ணன் மாறன் அவர்களைப் பற்றி... நான் கேட்கிறேன்...

அண்ணன் மாறன் அவர்களைப் பற்றிச் சொல்கிறபொழுது தனிப்பட்ட முறையில் நான் சொல்ல விரும்புவது... இன்றைக்கு இருக்கிற முதலமைச்சருக்கு மாறன் குடும்பம் மிக மிக வேண்டிய குடும்பம். அவர் கலைப்பயணத்தில் அந்த குடும்பத்தோடு இணைந்து பல திரைப்படங்களில் நடித்திருக்கிறார். ஆக, அவரை வைத்து டெல்லியிலே சென்று, அந்த குடும்பத்தை அழைத்துக்கொண்டு அண்ணன் மாறனுடைய தபால் தலையைக் கூட வெளியிட்டார்கள்.

**அவைக்குறிப்பில் இருந்து**
**நீக்க வேண்டும்!**

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாண்பு நிறைந்த சட்டமன்றத்திலே நேற்றைய தினம் முதலமைச்சர் எப்படி ஆதாரமில்லாமல் வெளியில் இருப்பவர்களைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற காரணத்தினால், நான் பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிற இந்த மாமன்றத்திலே, அவர் பேசிய அத்தனைக் குறிப்புகளும் காவல்துறை சம்பந்தப்பட்டதை நான் சொல்லவில்லை, இப்படித் திட்டமிட்டு ஆதாரமில்லாமல், அதேநேரத்திலே வழக்குமன்றத்திலே இருந்தவைகளையும், மிசாவைப் பற்றியும், இப்படித் தனிப்பட்ட முறையிலே மாறன் போன்றவர்கள் பற்றி எல்லாம் வாசித்ததையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எ.வ.வேலு பேசினார்.

---

### மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க திராணியில்லாமல்

# முதல்வர் விஜய்யின் பொறுப்பற்ற பேச்சைக் கண்டு கொந்தளிக்கும் மக்கள் !

**சென்னை, செப்.10-**

**சட்டப்பேரவையில் முதல்வரின் பதிலுரையின்போது, குற்றச் சம்பவங்களுக்கு பொறுப்பேற்காத விஜய்யின் பேச்சு மற்றும் அமைச்சர் ஸ்ரீநாத், பக்கத்து மேசை மீது அணில் குஞ்சுபோல் தாவி டேபிளை தட்டிய சம்பவம் பொது மக்களை முகம் சுளிக்க வைத்துள்ளது.**

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற 3 மாதங்களில், வரலாற்றில் இதுவரை கண்டிராத மோசமான அனுபவங்களை தமிழ்நாடு சட்டப்பேரவை கண்டு வருகிறது. கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்று வரும் சட்டப்பேரவை நிகழ்வுகளில், பொதுமக்கள் சார்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு, இதுவரை ஒரு முறைகூட உரிய பதிலை ஆளுங்கட்சியான த.வெ.க. அளிக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.. இந்நிலையில், ஒரு மாத காலமாக சட்டப்பேரவையில் சீட்டை தேய்த்துவிட்டுப் போன விஜய், திடீரென திங்கட்கிழமை பேசுகிறேன், அப்போது எதிர்க்கட்சிகள் ஓடிவிட வேண்டாம் என டயலாக் பேசிவிட்டு, அவர் அங்கிருந்து ஓடியது கண்டு தமிழ்நாடே சிரித்தது.

திங்கட்கிழமையும் வந்தது, சட்டப் பேரவைக்கு முதலமைச்சரும் வந்தார், ஒருமாதகாலமாக நடந்த சட்டப் பேரவையில், எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு இப்போதாவது தகுந்த பதில் சொல்வார் எனப் பார்த்தால்... மீண்டும் டைவர்சன் ரூட்டையே எடுத்தார் விஜய்... கத்தி படத்தில் நடித்தவர் என்பதாலோ தெரியவில்லை, சட்டப்பேரவையிலும் ஏதேதோ கத்திக்கொண்டே இருந்தார். ஆனால் 3 மாதங்களில் நடந்து வரும் ஏராளமான கொலை, கொள்ளை குற்றச் சம்பங்வகளுக்கு பொறுப்பேற்றதாக தெரியவில்லை. அதற்கு மாறாக, இதுவரை நடந்த சமூக விரோத சம்பவங்கள் அனைத்தும், தனிப்பட்ட விரோதம், குடும்பச் சண்டையால் நடந்த குற்றங்கள் என ஒரே போடாய் போட்டுவிட்டு, அரசுக்கும், அதற்கும் சம்மந்தமே இல்லை என்பது போல் பேசியது, தேர்தலுக்கு முன் வாய்சவடால் விட்ட விஜய்க்கும், இப்போதுள்ள விஜய்க்கும் உள்ள வித்தியாசத்தை மக்கள் உணரும் வகையில் இருந்தது

சட்டப்பேரவையில் 234 உறுப்பினர்களுக்கும் தனித்தனி மேஜை, டேபிள், இருக்கைகள் உள்ளன. எனவே உறுப்பினர் ஒருவரின் பேச்சை வரவேற்பதாக இருந்தால், அவர்களின் டேபிளை தட்டுவதே பேரவையின் மரபாக இதுவரை இருந்தது. ஆனால், நடிகராய் இருந்து மீன்வளத்துறை அமைச்சராக உள்ள ஸ்ரீநாத்தோ, விஜய்யின் பேச்சின் போது, அணில் குஞ்சுபோல் துள்ளிக் குதித்து, தனக்கு முன்னால் இருக்கும் பெஞ்சிற்குத் தாவி டேபிளை தட்டியது பொதுமக்களை முகம் சுளிக்க வைத்துள்ளது.

மேலும், வயதில் மூத்தவர்களாக இருந்தாலும் சரி, இளையவர்களாக இருந்தாலும் சரி, சட்டப்பேரவையில் இருக்கும் அமைச்சர்களை மாண்புமிகு என்றும், எம்எல்ஏக்களை அவை உறுப்பினர் என்றும் மரியாதை அளித்து பேசுவதுதான் தமிழ்நாடு சட்டப்பேரவை இதுவரை கண்ட பாரம்பரியம்... ஆனால், டாஸ்மாக் பற்றி விஜய் பேசியபோது, திடீரென பின்னால் இருந்த மதுவிலக்குத் துறை அமைச்சர் விக்னேஷை பார்த்து, அமைச்சருக்கான மரியாதையை அளிக்காமல், உனக்குதான் தெரியுமே என ஒருமையில் பேசியதும், தமிழ்நாடு சட்டப்பேரவை சந்தித்த மற்றொரு அரிய நிகழ்வாக அமைந்தது.

தொடர்ந்து, சம்பந்தமே இல்லாமல், பஞ்ச் டயலாக், குறைகள் சொல்வது என்பதைக் கடந்து காழ்ப்புணர்ச்சியை கொட்டுவது, சட்டையின் மேல் பட்டனை கழற்றிவிட்டு வெற்றுசவடால் விடுவது என ஆட்சி பொறுப்பேற்ற 3 மாதங்களில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் மாண்பை சீர்குலைத்துள்ளது விஜய் அரசு... ஒரு எம்.எல்.ஏ. தனது தொகுதியின் பிரச்னையை கூறும் இடத்தில், அதனை காதுகொடுத்து கேட்காத ஆளுங்கட்சியினர், வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி வருவது கண்டு பொதுமக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

---

### சட்டப்பேரவையிலிருந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதற்கு

# த.வெ.க. அரசையும், முதலமைச்சர் விஜயையும் கண்டித்து தே.மு.தி.க. வெளிநடப்பு!

### 'மக்கள் பிரச்சினைகள் குறித்து விஜய் பேசவில்லை' என பிரேமலதா விஜயகாந்த் பேட்டி!

**சென்னை, செப்.10-**

**சட்டப்பேரவையிலிருந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளிநடப்பு செய்தார். அப்போது த.வெ.க. அரசுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார்.**



முதலமைச்சர் விஜயின் அபாண்ட குற்றச்சாட்டுக்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்க கோரிய தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை அவையிலிருந்து சபாநாயகர் வெளியேற்றினார். இதற்கு தி.மு.க. கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், சட்டப்பேரவையிலிருந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளிநடப்பு செய்தார். அப்போது த.வெ.க. அரசுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார். சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினைகள் குறித்துப் பேச அனுமதி மறுக்கப்படுகிறது என்றும், தனது பதிலுரையில் மக்கள் பிரச்சினைகள் குறித்து விஜய் பேசவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

---

### செஞ்சி கிழக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி

# அப்பம்பட்டு அய்யாதுரை இல்லத் திருமண விழா!

### செஞ்சி மஸ்தான் - டாக்டர் பொன்.கௌதம சிகாமணி வாழ்த்து!

*செஞ்சி, செப்.10-*

*விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் அப்பம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை இராதிகா இவர்களின் மகள்பொறியாளர் அ. அஷ்விதாவிற்கும்,கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா திருப்பாலப் பந்தல் கிராமம்முத்துக்குமரன் ஜெயலட்சுமி இவர்களின் மகன் பொறியாளர் சந்துரு ஆகியது திருமணம் திருக்கோவிலூரில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணிய மகாலில் நடைபெற்றது. திருமண விழாவில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு தலைமை தாங்கிமணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.*

*திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த்,மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சாந்தி சுப்பிரமணியன், வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம்வழுதி,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,*

*செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,செஞ்சி ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், அனந்தபுரம் பேரூர் செயலாளர் சம்பத், செஞ்சி பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, அனந்தபுரம்பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா கல்யாண குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மணிமாறன், செஞ்சிஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பெருங்காப் பூர்ராஜேந்திரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம், மாவட்ட சிறுபான்மையர் அணி துணை அமைப்பாளர் மாத்தூர் தாஸ், தொண்டரணி அமைப்பாளர் சோடா பாட்ஷா , மாவட்ட பொறியாளர் அணி துணை செயலாளர் ரசூல் பாஷா, ஒன்றிய அவைத் தலைவர்கள் வாசு, ஆறுமுகம், ஒன்றிய துணை செயலாளர்கள் குமார் , மதியழகன், செல்வமணி, பாண்டுரங்கன், தாட்சயாயினி கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர்கள் இக்பால், சாரங்கபாணி, மாவட்ட பிரதிநிதிகள் கோடீஸ்வரன், குணசேகரன், அணையேரி ரவி, திருநாவுக்கரசு, கதிரவன், மன்னார் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர். செஞ்சி கிழக்கு ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் பார்த்திபன் அனைவருக்கும் நன்றி கூறினார்.*

